
7/200/0388

# நாரஹேன் ஸ்ரீ இலங்காதீஸ்வரர்



நாரஹேன் ஸ்ரீ லங்காதிஸ்வரக் கோயில்

முகப்புத் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T/200/0388

# நுவரெலியா மாவட்டம்

## புனித நர்மதா நதியில் ஜெனித்த
## சுயம்புலிங்க
## நுவரேலி இலங்காதீஸ்வரர்

ඉංදියාවේ ශුද්ධ වූ නර්මද නදියේ උත්පත්තිය ලැබූ
නුවරඑළියේ පිහිටා ඇති
සුයම්බුලිංග ලංකාතීස්වරර්

THE SUYAMBULINGA LANKATHEESWARAR
BORN IN THE HOLY NARMADA RIVER
IN INDIA
(INSTALLED IN NUWARA ELIYA)

1–6–1981

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சுயம்பு லிங்க இலங்காதீஸ்வரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறங்காவல் அமைச்சரின் ஆசியுரை



இலங்கையில் இராவணன் காலத்தில் லட்சக்கணக்கான சிவலிங்கங்கள் நிறுவப்பட்டன. சிவலிங்க வழிபாடு இராவணேஸ்வரர் காலத்து நாடெங்கிலும் இருந்தது. நுவரெலியாவில் இராவணன் வாழ்ந்த அடிச்சுவடுகளைப் பிரதிபலிக்கும் இடங்களின் பெயர்கள் ஆங்காங்கு இன்றும் அழியாது நிற்கின்றன.


நுவரெலியா மாவட்டத்தில் புனித நர்மதா நதியில் ஜனித்த சுயம்புலிங்க நூரளை இலங்காதீஸ்வரர் ஆலயம் நாளும் பொழுதும் மக்களை மனங்கவரும் புண்ணியதலமாக மாறிக்கொண்டு வருகின்றது. மா தவமுனிவர் சிவபால யோகி அவர்கள் தனது தெய்வீகக் கரத்தினுல் உருவாக்கி வைத்த இந்த புண்ணிய தலம் இந்துப்பெருமக்களுக்குக் கிடைத்த ஓர் அரும் நிதியமாகும்.

**செல்லையா இராசதுரை**

*பிரதேச அபிவிருத்தி அமைச்சு*
*கொழும்பு 1-6-81*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ சிவபாலயோகி மகாராஜ் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிப்பாளரின் செய்தி

''சிவராத்திரிச் சிறப்பு'' எனும் நூலில் சிவாலயங்கள் பற்றிய குறிப்புகளும் சேர்க்கப்பட்டன. அன்பர் சதாசிவம் அவர்கள் நூரளை ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயம் பற்றி எழுதி உதவிய குறிப்பு சிறிது விரிவாக அமைந்தமையாலும், மலையகம் சேர்ந்த தலமாகையாலும் 'இராவணன்' பற்றி வழங்கும் பாரம்பரியங்களை நினைவூட்டுவதாலும் இவ்வாலய வரலாற்றினைத் தனி வெளியீடாகவும் அச்சிடத் திருவுளம் கொண்டோம்.

நம் முன்னோரது பண்பாட்டுச் சிறப்பினை இளம் சந்ததியினர் அறியும் வண்ணம் பேணி வழங்குதல் எம் திணைக்களத்தின் தலையாய பணிகளில் ஒன்றாகும். நாயன்மாரே தம் பதிகங்களில் போற்றும் வண்ணம் வேத நெறியையும் மிகு சைவத்துறையையும் நன்குணர்ந்த சாமவேதம் பாடும், நீறுபூசும், சிவபூசை செய்யும் வீணைக்கொடியோன் இராவணன் என்பதையும் சிவபால யோகிகளின் அருந்தொண்டினையும், இவ்வாலயத்தின் மகிமையினையும் அது அமைந்திருக்கும் எழில்மிக்க சூழலையும் உணர்த்துவதாய் இச்சிறுநூல் அமைய அருள்செய்த திருவருளை நினைந்து வாலறிவன் நற்றாள் தொழுது அமைகின்றோம்.

வணக்கம்

இப்படிக்கு
தங்கள் அன்புள்ள,

வே. ந. சிவராசா
பணிப்பாளர்,
இந்துசமயத் திணைக்களம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவரின் செய்தி

மக்கள் சமுதாயத்திற்குச் சேவை செய்யக் கூடியதாக ஓர் ஆத்மீக இல்லத்தை மலைநாட்டில் ஆரம்பிக்க வேண்டுமென்ற எனது கனவினை நனவாக்க ஸ்ரீ காயத்திரியைப் பிரார்த்தித்தேன். எனது பிரார்த்தனை நிறைவேறியது. பாரதத்தில் (இந்தியாவில்) சுற்றித்திரிந்த காலத்தில் தவ யோகியர், தவமுனிவர், ஞானக்கண்ணுடையர் அன்பும் ஆசியும் கிடைத்தது. இதன்பயனாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நுவரெலியாவிலுள்ள இவ்வாச்சிரமம் ஆரம்பிக்க முடிந்தது.


எனது தாழ்மையான வேண்டுகோளுக்கிணங்கி சிவ பால யோகி மகராஜ் அவர்கள் இவ்வாசிரமத்திற்கு 12-10-78இல் விஜயஞ் செய்து தான் நர்மதா நதியில் கண்டெடுத்த சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்ய இணங்கியுள்ளார்கள். பொருத்தமாக லங்காதீஸ்வரர் எனப் பெயருமிட்டுள்ளார்.

R. K. முருகேசு

ஸ்ரீ லங்காதீஸ்வரர் தயான மந்திர
82, லேடி மக்கலம் டிறைவ்
நுவரெலியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆத்மீகத் தலைவர்
அருள் திரு. R. K. முருகேசு அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## සභාපතිතුමාගේ පණිවුඩය

කන්ද උඩරට අධ්‍යාත්මික නිවසක් (ආශ්‍රමයක්) විවෘතකරනවා මම සිහිනෙන් දුටුමි. මෙය යහතින් ක්‍රියාකරවීම සඳහා මා ශ්‍රී ගයාත්‍රි දේවියට යාඥාකලේ මාගෙන් මිනිසාට යම් සේවයක් සිදුකරගැනීම අරමුණ කරගෙනය. එය සැබෑවක් විය. මා භාරත දේශයේ (ඉන්දියාවේ) සංචාරය කරනවිට සංසාර තරණය කරනලද අධ්‍යාත්මක ගුරුන්ගෙන් හා ජීවිතයේ සංසාර නමැති සයුර තරණය කරමින් සිටින අයගේ ප්‍රේමයත් ආශිංසණයත් හේතුකොටගෙන අවුරුදු දෙකකට ප්‍රථමයෙන් නුවරඑළියේ ආශ්‍රමයක් විවෘත කරන ලදී.

සිව බාලයෝගි මහරාජ් තුමාට කරණ ලද ආරාධනය පරිදි එතුමා විසින් නර්මද නදියෙන් ගන්නා ලද සිව ලිංගය ස්ථාපනය කිරීමට 1978 මාර්තු මස 12 වෙනි දින නුවරඑළියේ ආශ්‍රමයට පැමිණ ඇත. ලංකාතීශ්වර නමින් ශ්‍රී සිවබාලයෝගි මහරාජ් තුමා එය නම් කර ඇත.

ආර්. කේ. මුරුගේසු

ශ්‍රී ලංකාතීශ්වර ධ්‍යාන මන්දිරය,
82, ලේඩි මැක්ලම් ඩ්‍රයිව්
නුවරඑළිය.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *President's Message*

Twenty years ago I had a dream of opening a Spiritual Home in the hill country. I prayed to Sri Gayatri to make it come true, so that I could be of service to humanity. My prayer was answered. During my sojourn in Bharath (India), I received the love and blessings of the savants, sages and the enlightened ones, which enabled me to open this ashram in N' Eliya, two years ago.

In response to my humble request Siva Bala Yogi Maharaj has kindly consented to visit this ashram on October 12, 1978 and instal the Sivalingam, which he found in the holy waters of the Narmada. Swamiji has aptly named it 'Lankatheeswaran'.

**R. K. Murugesu**

Sri Lankatheeswara Dhyana Mandir,
82, Lady Mc Callum Drive,
Nuwara Eliya.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுரலை ஸ்ரீ இலங்காதீஸ்வரர்

வே. சதாசிவம் B. A., M. Litt., Dip. Ed., C.E.S.
(முன்னுள் உதவிப் பரீட்சையாணையாளர்)

குழந்தைப் பருவத்திலே ஞானப் பாலுண்ட சம்பந்தர் தென் இந்திய இராமேஸ்வரத்திலிருந்தே திருக்கோணேஸ்வரத்திற்கும் திருக்கேதீஸ்வரத்திற்கும் பாடல் வழங்கி ஈழத்தைப் பெருமைப் படுத்தினர். இந்நிகழ்ச்சி 1300 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்றது. இளமைப் பருவத்திலேயே சிவ அருள் பெற்ற சிவபாலயோகியர் நம்மிடையே வந்து கிடைத்தற்கரியதொரு சுயம்புலிங்கம் தந்து அதற்குக் கோயில் எழுப்பச் செய்து பிரதிஷ்டையும் செய்து லங்காதீஸ்வரம் எனப் பெயருமிட்டு நம்மைக் கௌரவித்தனர். இந்நிகழ்ச்சி இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்தது. அன்று ஞானத்துடன் சம்பந்தப்பட்ட சம்பந்தரும், இன்று யோகத்துடன் சம்பந்தப்பட்ட சிவபாலரும் தந்தைக்குத் தனயராகவுள்ள பெயர்ப் பொருத்தம் சிந்தித்து தெளிதற்குரியது.

இதுவரை வடக்கு, கிழக்கு, வடமேற்குப் பிரதேசங்களிலுள்ள கடலோரங்களிலும் வயற் பிரதேசங்களிலும் கோயில் கொண்ட தெய்வம் இப்பொழுது அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாக இலங்காதீஸ்வரர் என்ற பொதுப் பெயர் பொருத்தத்துடன் தமது அருள் ஆட்சிப் பரப்பினை மஞ்சுதோய் மத்திய மலைப்பிரதேசத்துக்கும் விஸ்தரித்து இதுவரை மலையக மக்களுக்கு சிவத்தலமில்லாத ஒரு பெருங்குறையை நீக்கியிருக்கிறது. அண்மையில் 16-10-78இல் எழுந்த இச் சிவத்தலம் ஏனைய சிவத்தலங்கள்போல எதிர்காலத்தில் பேரும் புகழும் வாய்ந்த மாபெரும் ஸ்தலமாக பொலிவுறும் என்பதற்கு தக்க அறிகுறிகள் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கோயில் தோன்றியுள்ள இடம் ஸ்ரீ நகர் என்ற புனிதஸ்தலம். இலங்கையை ஆண்ட சிவபக்தனான இராவணனின் மகன் "வில்லாளனூர்க்கெல்லாம் மேலவனான" மேகநாதன் தனது தந்தையின் ஞாபகார்த்தமாகவும் அவரின் நற்கதிக்காகவும் இதே இடத்தில் இதே போன்றதொரு சுயம்புலிங்கம் வைத்து வழிபட்டதாகவும், மேகநாதனின் வழிபாட்டில் ஈர்ப்புண்ட பிரம்மா, விஷ்ணு, இந்திரன் முதலாகவுள்ள தேவர்கள் தண்மழை பொழிந்தும் பூமழை சொரிந்தும் மேகநாதனையும் இவ்விடத்தையும் ஆசீர்வதித்துக் காத்தனரெனவும் இவ்விடம் இன்றும் காக்கப்படுகிறதெனவும் நூரளையில் நிலவும் ஓர் ஐதீகம் கூறுகிறது. திரிகால உணர்வுத்தவமுனிவரான ஸ்ரீ சிவபால யோகிகள் இக்கோவிலைத் தாபித்த பொழுது இலங்கை வானொலிக்கு விடுத்த செய்தியில் இவ்வைதீகம் மெய்யானதென உறுதிப்படுத்தி உள்ளார்கள். அன்று தொடக்கம் இன்றுவரை புனித ஸ்தலமாகவே இருந்த இச்சான்றுபோக, வேறொருவாறான விளக்கமும் இதனை மேலும் உறுதிப்படுத்துகிறது. "கொல்புலித்தோல் நல்லாடை கட்டிய சிவன் சுடுகாட்டைக் கோவிலாகக்கொண்டவன். பேயோடாடியவன். அவன் அணியும் நீறு காடுடைய சுடலையிலுள்ள பொடி; என நாம் அறிந்ததற்கேற்ப அன்று சுடுகாடாக இருந்த இன்றைய ஸ்ரீநகர் சிவன் தாண்டவம் ஆடும் களமாகவே இருந்து வந்துள்ளது. இப் புனித இடத்தில் தனிப்பட்ட மனிதர் குடியேறி வாழ்ந்ததேயில்லை. வாழ முடிவதுமில்லை. தூய்மை கருதிவாழ முடியாமல் பூதகணங்கள் தடுத்துக்கொண்டிருந்தன 1975 ஆம் ஆண்டில் அருள் திரு. முருகேசு குடியேறியதும், உரியவர் வரும்வரை தூய்மை காக்கப்பட்டதுபோல மனித சஞ்சாரத்திற்கேற்பட்ட இடர்கள், தடைகள் யாவும் சூரியனைக் கண்ட பனிபோல் அகன்றன. தொடர்ந்து செப்டம்பர் 1978 ஆம்ஆண்டு ஸ்ரீ இலங்காதீஸ்வரர் கோவிலும் இப்புனித இடத்தில் ஆரம்பமாயிற்று. தெய்வ அருளினால் விளைந்த சுயம்புலிங்கம் எமக்குக்கிடைத்தது; தெய்வவடிவாக வந்த சிவபால யோகியரால் பிரதிஷ்டை செய்யப்பட்டது: புனிதமான ஸ்ரீநகர் தேர்ந்தெடுக்கப் பட்டது; தவ வலிமை பெற்ற அருள் திரு. முருகேசு அவர்கள் ஸ்ரீ நகரில் குடியேறியது: இவையாவும் திட்டமிட்டுச் செயற்படுத்தும் எமையாளும் ஈசன் செயலாகத்தான் இருக்கமுடியும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுக்கேற்றவாறு தெய்வீக நிகழ்ச்சிகளும் ஸ்ரீநகரில் நடைபெற்றுக்கொண்டுதானிருக்கின்றன. தெய்வத்தின் கருணை வலுவில் நம்பாத மக்களையும் நம்பவைக்கும் அற்புதங்களும் இங்கு நடைபெறுமலில்லை. லிங்கப் பிரதிஷ்டை செய்த அதே நேரம் ஒவ்வொரு நாளும் 12 மணி பூஜை நடைபெறும் பொழுது வரட்சி வெய்யிலிலும் மழை கொட்டுவது போன்ற ஓர் அற்புதமான சத்தம் கூரையின் மேல் இரண்டு நிமிடங்களுக்குக் கேட்கிறது. பளிங்கு போன்ற லிங்க மேனியிலிருந்து வேர்வைத் துளிகள் வழிந்து கொண்டிருக்கின்றன. பிரதிஷ்டைசெய்த நாட்களிலிருந்து இதுவரை நம்பத்தக்க அளவு ஓர் அங்குல வளர்ச்சியும் லிங்கம் அடைந்துள்ளது. தெய்வம் நடமாடுகிறதென்ற ஓர் உணர்வு அங்கு திரளும் மக்களுக்கு நாளடைவில் வலுப்பெறுகிறது.

இப்புனித நகருக்கு அணித்தாய் மூன்று மைல் தொலைவில் உள்ளது சீதா எலியா. இது ராமாயணக் கதாநாயகி சீதா பிராட்டி இருந்த அசோகவனம் எனக்கருதப்படுகிறது. அநுமன் கண்ட அசோகவனம் என்பதற்கு ஆதாரமாக அசோகமரங்கள் காலத்திற்கேற்ப அழகுறு பூந்துணர்களுடன் காணப்படுவன. ஞாபகார்த்த கோயிலாக சீதையம்மன் கோவிலும் இங்குள்ளது. இதனருகில் இருமருங்கிலும் மலிந்து உயர்ந்து நிற்கின்ற அசோகமரங்களைக் கொண்டதும் வற்றா ஊற்றினைக் கொண்டதுமான ஓர் அருவி பாய்கிறது. பரந்துபட்ட பெருமலைச்சோலைகளும், குன்றுகளும் சூழ்ந்த இம்மலைப் பிரதேசம் இராம இராவண, இராமாயணக் காட்சிகளைக் காட்டுவது போலுள்ளன.

உள்ளங்கிளர்ந்து மெய்மறக்கவைக்கும் ஹனுமானின் சஞ்சீவி மலையெனப்படும் உயர் குன்றுக்குப் பக்கத்திலுள்ள பெயர்பெற்ற ஹக்கலைப் பூங்கா இதற்கு நாலு மைல் தொலைவில் உள்ளது. 7000 அடி உயரத்திற்கு மேலுள்ள இந்த மலைப் பிரதேசத்தில் நாள் முழுவதும் பனி பெய்வது போன்ற (குட்டி இங்கிலாந்துக்) கால நிலையுள்ளது. நறுமலர்கள் அன்றலர்ந்த பனிமலர்களாகவே நாள் முழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதும் காணப்படுவன. இப்பனிமலர்கள் "பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தியப் பனிமலரெடுக்க மணமும் நண்ணேன்" என்ற தாயுமானரின் பாடலை உணர்த்தி அத்தெய்வ மலர்களைப் பறிக்கவொண்ணாது தடுக்கும் ஒரு மன்நிலையை ஏற்படுத்துகிறது.

இராவணன் வழிவந்த மேகநாதனால் புனிதமாக்கப்பட்ட ஸ்ரீநகரில் ஓர் இலங்காதீஸ்வரர்: இரவணனால் இடம்பெயர்ந்த சீதையின் விரத பிரார்த்தனைகளால் புனிதமாக்கப்பட்ட சீதா எலியாவிலுள்ள சீதையம்மன் கோயில்; மக்களுள் மறைந்துள்ள தெய்வீகத்தை வெளிக்கொணரும் அற்புத தெய்வீக ஹக்கலைப் பூஞ்சோலை: இவையாவும் ஸ்தல யாத்திரீகர்களையும் உல்லாசப் பிரயாணிகளையும் ஈர்க்கும் கண்ணினையும், கருத்தினையும் கவருகின்ற தெய்வீகப் பதிகளாகும். இன்றும் ஏராளமான கதிர்காம யாத்திரீகர்கள் இவற்றைத் தரிசித்து செல்லத் தவறுவதில்லை. எழில் மிகுந்த இக் குளிர் வலயத்தில் நீக்கமற நிறைந்து அருளைப் பொழியும் ஸ்ரீலங்காதீஸ்வரர் கோயிலை ஸ்தாபிப்பதற்கு தூண்டு கோலாக இருந்த தவவலிமைபெற்ற அருள் திரு. முருகேசர் அவர்கள் இப்புனித நகரிலுள்ள இக் கோயிற் பூசகராவும், ஆன்மீக கலாச்சார நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பாளராகவும், மாறுத மனநோய் அங்கத்துறு நோய்கள் பல தீர்க்கும் அருமருந்து கொடுக்கும் மருத்துவராகவும் பணிபுரிகிறார்கள். பற்றற்றான் பற்றினைப்பற்றி வாழ் வாங்கு வாழும் அருள்திரு முருகேசர் அவர்களை சுவாமி எனவே பொதுவாக எல்லோரும் அழைத்து தக்க மதிப்பு கொடுக்கின்றனர். இவருக்கு உறுதுணையாக ஸ்ரீ சிவபால யோகிகளின் அருட்பார்வைக்கு அருகதையாகி ஆத்மீக உச்ச ஸ்தானம் பெற்ற அருள் திருமதி சீதாபாபு அம்மையார் அவர்கள் இக்கோயிற் திருப்பணிகளில் முக்கிய பங்கு பற்றி வருகிறார்கள். பால் பழம் மாத்திரம் உட்கொண்டு பிரதிஷ்டைக்கு இடையூறு வராமல் காப்பதற்காக 34 நாட்கள் லிங்கத்துக்கு அல்லும் பகலும் தியான பிரார்த்தனை, பூஜைகள் செய்யும்படி சுவாமிகளால் பணிக்கப்பட்ட பெருமை இவ்வம்மையாருக்குண்டு. இக்கோயில் சிவபாலயோகி மகராஜ் நம்பிக்யைுறுதியின் (Trust) கீழ் இயங்குகிறது. இக்கோயிலின் தர்மகர்த்தாக்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய இருவரையும் திரு பாபு அவர்களையும் சுவாமி நியமித்துள்ளார்கள்.

இக்கோயிலில் நாள்தோறும் நடைபெறும் காலை, மாலைப்பூஜை பிரார்த்தனைகளிலும் வாரமொருமுறையுள்ள விசேட வியாழக்கிழமைப் பூஜை வழிபாடுகளிலும் மாதமொரு முறை நடைபெறும் போயாத் தினத்திலும் சாதி சமய பேதமற்ற மக்கள் கூட்டம் கலந்து கொள்கிறது. ஆண்டு தோறும் வருகிற மகாசிவராத்திரி விழா, நவராத்திரி விழாக்கள் மிக விசேடமாகக் கொண்டாடப்படுகின்றன. எல்லாப் பூஜைகளிலும் கலந்துகொள்ளும் மக்கள் பூஜைத்திரவியப் பொருட்களுடன் மாத்திரமே வந்து காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவதனையே சிறந்த வழிபாடு எனக்கருதும் இக்கோயிற் பூசகரும் நிர்வாகத்தினரும் அருச்சனைப் பணத்தையோ உண்டியற் பணத்தையோ எதிர்ப்பார்ப்பதில்லை. இவை கண்டிப்பாகத் தவிர்க்கப் பட்டுள்ளன. மகா சிவராத்திரியிற் பங்குபற்றும் சாதி சமய பேதமற்ற எல்லாப் பக்தர்களும் சுயம்புலிங்க உருவிலுள்ள லங்காதீஸ்வரப் பெருமானைத் தொட்டுக் கும்பிடும் பெருவாய்ப்பினையும் பெறும் பாக்கியத்தினையும் பெறுகின்றனர்.

காலத்திற்கேற்பவுள்ள சிறப்பியல்புகளைக் கொண்ட மாபெரும் யாத்திரைத்தலமாக காலக்கிரமத்தில் உயரவுள்ள இந்நூரானை லங்கா தீஸ்வரம், கோல்நோக்கி வாழும் குடிமக்களுக்காக, மக்களுடன் இணைந்து, மக்களால் நடாத்தப்பட்டு பக்திநெறி காட்டி, முத்தி நெறியளிக்கும் பெரியதொரு சிவத்தலமாகும்.

''வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக.
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமம்
சூழ்க வையகமும் சூழ்ந்துயர் தீர்கவே''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ශ්‍රී ලංකාතීස්වර දේවාලය.

හින්දු ජන ජීවිතයේ මූලික පදනම වී ඇත්තේ ආගම හා ඒ හා ආශ්‍රිතව පැවතෙන දේවාලයයි. ලංකාවේ සිව වන්දනාවේ ශ්‍රී විභූතිය පිළිබඳව මෙහි ඇති පෞරාණික දේවාල සාක්ෂි දරයි. ශ්‍රී ලංකාවේ පිහිටි ආගමික වටිනාකමකින් යුතු දේවාල පිළිබඳව විස්තර කරන සුප්‍රසිද්ධ උගතකු හා ඉතිහාසඥයකු වන පෝල් පීරිස් මහතා ලංකාවේ ප්‍රධාන ස්ථානයන්හි පිහිටා ඇති හින්දු කෝවිල් පිළිබඳ විචිත්‍රවූ දර්ශනයක් මවා පෙන්වයි. "විජයාගමනයට බොහෝ කලකට පෙර (ක්‍රි. පූ. 543) ශ්‍රී ලංකාවේ සමස්ථ ඉන්දියාවේම ගෞරවයට හා භක්තියට පාත්‍රවූ පිළිගත් ශෛව වන්දනා ස්ථාන පහක් තිබුනි" මෑතදී තනනලද නුවරඑළියේ ලංකාතීස්වර කෝවිලද මේවාට එක් වේ. මෙය ලේඩි මැකලම් ඩ්‍රයිව් හි 82 දරණ ස්ථානයෙහි පිහිටා ඇත. මෙය ශ්‍රී ලංකාවේ මධ්‍යම කඳුකරයේ ඉදිකරනු ලැබූ මුල්ම සිව කෝවිල වීම නිසා විශේෂත්වයක් දරයි. මෙයට ඓතිහාසික හා මතිමතාන්තර වලින් යුත් අතීතයක් ඇත. ශ්‍රී ලංකාවේ පැරණි රජකු වන රාවනාගේ රාජධානිය වූයේ මෙයයි. ශිව භක්තිකයෙකු බැව් පැවසෙන රාවනා රජු, දැන් ලංකාතීස්වර කෝවිලේ පිහිටි සිවලිංගය හා සමානවූ සිවලිංගයක් තබාගෙන වන්දනා කළ බැව් දක්වේ. මේ සුවිශේෂ සුයම්බු ලිංගය (ස්වයං උප්පත්තිය ලැබූ) දැනට ජීවත්ව සිටින ශ්‍රේෂ්ඨතම ශුද්ධවන්තයකු වන ශ්‍රී සිවබාලයෝගි මහාරාජ් තුමා විසින් වසර 12 ක දිගු කාලයක් තුල දරුණු සුවයන් වධබන්ධනයන් විඳිමින් සිටියදී උතුරු ඉන්දියාවේ නර්මද නදියේ තිබී සොයාගනු අතර මව් රටේ පැන නැගුණු දැඩි විරෝධය නොතකා එතුමා විසින් එය ශ්‍රී ලංකාවට ප්‍රදනය කරණ ලදි. මෙම සිවලිංගය පිහිටු වීමෙන් අනතුරුව ශ්‍රී සිවබාලයෝගි මහාරාජ් විසින් සිය ගුවන් විදුලි ප්‍රකාශනයේදී සනාත කරන ලද පරිදි, මෙහි අතීත කථාව වනුයේ රාවනා රජුගේ පුත් මේඝනාදන් සිය පියා සිහිවීම සහ ඔහු වෙත පිං පැමිණවීම සඳහා දැන් සුයම්බු ලිංගය පිහිටි ස්ථානයෙහිම තබා සුයම්බු ලිංගයක් වන්දනා කළේය. මේඝනාදන් ගේ කැපවීම හා භක්තිය ගැන පැහැදුනු, බ්‍රහ්ම විෂ්ණු මහේස්වර හා හින්ද්‍ර යන දෙවියන් ප්‍රමුඛ දෙවිවරු දැනට ලංකාතීස්වර කෝවිල පිහිටි ස්ථානයෙහි අරක්ගෙන, මේඝනාදන්ට සෙත් පැතූහ. මෙම ස්ථානයේ ශුද්ධවත් බව හා පාරිශුද්ධත්වය මෙබඳුය. මෙහි දැන් පදිංචිකරු වන ශ්‍රී මුර්ගේසු තුමා 1977 දී මෙහි පදිංචියට පැමිණි අතර 1978 ඔක්තෝබර් මස 16 වන දින ශ්‍රී සිවබාලයෝගි මහරාජ් තුමා විසින් ස්ථාපනය කරනු ලැබූ ශුද්ධවූ සිව ලිංගය ස්ථාපනය කිරීම, ශ්‍රී මුරුගේසු හා සිවබාලයෝගි මහාරාජ්තුමාගේ කිට්ටුවර අනුගාමිකයෙකු වන ශ්‍රීමතී සීතා බාබුගේද සහය ඇතිව මහාරාජ්තුමා විසින් පුද්ගලිකව පරීක්ෂා



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

කළේය. මේ දෙපල නොවන්නට මෙම ලිංගය ශ්‍රී ලංකාවේ ස්ථාපනය නොක-රන්නට තිබුනි. භාවනානුයෝගීව ස්වංවධ විදිමට හා වන්දනා කිරීමට ස්වාමිවරයා විසින් තෝරාගනු ලැබුයේ සීතාතුමියවය. ඇය දින 34 ක් තිස්සේ කිරි හා පළතුරු පමණක් ආහාරයට ගනිමින් සම්පූර්ණ ගොළුවත රැක්කාය. මෙ සියල්ල දිව්‍යමය වැඩ පිළිවෙලකි. ලංකාතිස්වර කෝවිලේ පිහිටා ඇති ස්ථානයෙහි යම්කිසි අවිද්‍යාමාන බලවේගයක් ඇති බව නිසැකය. කළෙක මනුෂ්‍ය ඇසුරෙන් වෙන්ව තිබූ මේ ස්ථානය, දැන් ශ්‍රී මුරුගේසු තුමාගේ නායකත්වය යටතේ අධ්‍යාත්මික හා සංස්කෘතික කටයුතුවලින් පිරී පවතියි. මෙහි පදිංචිව සිටින ශ්‍රී මුරුගේසුතුමා එහි පූජාවන් හා නඩත්තුව භාරව සිටින අතර, මෙහි කෙරෙන කටයුතු මුළුමනින්ම සුපරික්ෂා කරන්නේද එතුමාය. ජාති, කුල, ආගම් හෝ පන්ති භේදයකින් තොරව දහස් ගණන් බැතිමත්තු, මේ කෝවිලේ සිදුවන ප්‍රතිහාර්යයන් දැක බලාගැනීම සඳහා පැමිණෙත්. දවල් 12 ට, එනම් මෙම ලිංගය ස්ථාපනයකළ වේලාවට පූජාව පැවැත්වෙන අවස්ථාවේදී පියස්ස මතට වැහි වතුර වැටෙන්නාක් බඳු ශබ්දයක් ඇසීමට පුළුවන.

ලිංගයේ කාන්තිමත් මතුපිට නෙතමනය හා දහඩිය බඳු සිහින් දිය දහරක් වැටෙනු දැකීමට පුළුවන. ලිංගය පිහිටවූ දින සිට එය ක්‍රම ක්‍රමයෙන් වැඩෙනු දැකීමට පුළුවන. මේ සියල්ල මේ කෝවිලේ ප්‍රතිහාර්යයන්ය. ඉතා ශෝභනවූත් පාරිශුද්ධවූත් පරිසරයක කන්දක් මත පිහිටි මේ දේවාලය, කෙතරම් අලංකාර හා සිත්ගන්නා සුළු වේදැයි කිවහොත් එය වැදීමට යන්නෙකුට දෙවියන් වැඩ-සිටින බවට හැඟියන අතර, නිරන්තරයෙන්ම යමෙකුගේ අධ්‍යාත්මික හැඟීම් බිහිවෙයි.

**ලංකා තිශ්වරර්ගේ පිහිටින් දියුණුවීමේ ශක්තිය සියල්ලන්හට ලබාකෙරේවා!**

(ශ්‍රී ලංකාතිස්වර දේවාලය සම්බන්ධ දෙමළ ප්‍රකාශනයෙහි සිංහළ අනුවාදය.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SRI LANKATHEESWARAR TEMPLE

The very base of Hindu Life has been the religion and the temple associated with it. In Sri Lanka we have had five* ancient Siva Temples in the coastal regions of the North, East and Northwest. Adding to this is the latest Sri Lanka-theeswarar Temple in Nuwara Eliya. It is situated in 82, Lady McCallums's Drive. It is unique in that, it is the first Siva Temple in the Central hilly regions of Sri Lanka in recent times. It has a historic and legendary past. It was in this region that Ravana the king of ancient Lanka had his capital even though the culet of God Vibhishna, reminiscent of the Ramayana legends is centered traditionally in Kelaniya, Ravana is said to have been a Siva Bhakta who kept and worshipped a Lingam exactly of the type as is found now at Sri Lankatheeswarar Temple. This unique Suyambu (shaped on its own) has been discovered by Sri Sivabalayogi Maharaj, one of the greatest spiritual saints living now; who after his rigorous penance for 12 years discovered this Lingam in the holy waters of river, Narmada in North India and donated it to Sri Lanka. The story goes, as is confirmed by the seer Sri Sivabalayogi Maharaj, in his Radio talk given after the installation, Ravana's son Meganathan, to perpetuate the memory of his father and give merits to him, worshipped a Suyambu Lingam in the same premises where the present Suyambu Lingam is. Taken up with the dedication and devotion of Meganathan, the devas led by Brahma, Vishnu, Maheswara, Indra have been hovering for ever, the very same premises in which Sri Lankatheeswarar now is, and blessed Meganathan. Such has been the holiness and sanctity of this place. The present occupant, Sri R. K. Murugesu came into residence in 1975. By his spritual eminence and power he has been the one and the only one to hold on to the sanctity of this place, where the holy Sivalingam has now been installed by Sri Sivabalayogi Maharaj on the 16th October 1978. The installation of this Lingam was personally supervised by the Swamiji with the assistance of Sri Murugesu and Srimathi Seetha Babu, the latter a close disciple of Sri Sivabalayogi Maharaj. If not for these two the lingam wouldn't have been installed in Sri Lanka. It was Seetha who had been chosen by the Swamiji



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

to sit in meditation, penance and prayers with this great Lingam making it auspicious. She observed complete silence taking only milk and fruits for thirty four days. It is all a divine plan. It is undoubtedly an unseen Power hovering over this spot where Lankatheeswarar now is. A place once deserted by humanity, now bustles with spiritual and cultural activities under the leadership of this spritual leader Sri Murugesu who is resident looking after the poojas and the maintenance of the temple. He has an overall supervision of the activities there.

Thousands of devotees without any distinction of community, caste, creed or class, flock to this temple to see and hear for themselves the miracles in this temple. At 12 noon, this being the time of installation of the Lingam, when the pooja is on, one could hear the sounds, like the clatter of rains on the roof; one could see moisture and perspiration like drops coming down the lustrous surface of the Lingam; one could see its gradual growth since its inception; all these are miracles in this temple. This temple being situated in a lovely and pure environment of a mountain atmosphere of N'Eliya* Vide appendix I is so enchanting and entrancing that anyone visiting the temple, experiences for himself the divine Presence and ones spiritual unfoldment takes place on its own.

---

*The ancient temples of Ceylon testify to the antiquity of Saivaism in Ceylon, Speaking of the sacred shrines of Ceylon, **Paul Pieris**, the illustrious scholar and historian, has left us a graphic picture of the Hindu Temples at the cardinal points of Ceylon: –

> Long before the arrival of Vijaya (543 B.C.) there were in Lanka, five recognised isworams of Siva, which claimed and received the adoration of all India. There were—
>
> **Tiruketheswaram** near Mahtittha
> **Munneswaram** dominating Salawatta and the Pearl Fishery
> **Tondeswaram** near Mantota
> **Tirukoneswaram** opposite the great bay of Koddiyar and
> **Naguleswaram** near Kankesanturai

Paul Pieris E. "Nagadipa and Buddhist remains in Jaffna" J. R. A. S. (CB), Vol. XQVI, No. 70 pp. 17.18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## APPENDEX I

Speaking on the attractions of Nuwara Eliya Henry Cave said in1900:

There is probably no other place in the world that possesses such a remarkable combination of attractions as Nuwara Eliya and its surrounding districts. Seven thousand miles from London, six degrees from the equator, and 6200 feet above the sea, lies this unique retreat, whose precious attributes, hitherto practically inaccessible, must now become familiar to thousands.

Egypt has its healing climate, the Engadine its lovely scenery, Brazil its wooded wilderness, the Alps their flowery meadows, and Peru its high plateau, but here, in one of our own Colonies, easy of access and free from any serious draw-back, are all these and a hundred other attractions, forming a combination of the most delightful conditions under which man can desire to live.

"The sea hath its pearls"

and that same benficient ocean, which by its yield of the precious mollusca contributes so largely to the revenue of Ceylon, administers in no small degree to the conditions which exempt the climate from every objectionable extreme and render it such a favourable contrast to that of the great Indian peninsula, To the moderate dimensions of the island, and its geographical position in the Indian ocean, like a pendant of the great continent, receiving the full benefit of the monsoons at all times of the year its superb climate is mainly due.

In the West Highlands of Scotland, both landscape and climate, at their best, may be suggestive of Nuwara Eliya, but the latter has a special charm of situation which, as we shall see, possesses advantages over every other health resort in the world. Here we can enjoy the purest and most invigorating air, with a temperature best suited to the health of Europeans, and yet look down upon a luxuriant tropical country at our feet. We can experience the change from a glorious bright day to a cold Scotch mist, and yet, if we choose, we can leave the moist atmosphere and leaden sky at will, and by an hour's walk reach dry hills and sunny plains.

A clear idea of the situation of this favoured spot can best be gained by regarding the highlands of Ceylon as one huge upheaval, having an area of about 4,000 square miles, with an irregular surface of hills and peaks of varying elevation, deep ravines and grassy plains, dense forests and open valleys, gentle streams and roaring



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

cataracts a dozen distinct climates, each with its special characteristics of animal and vegetable life, from the lofty palms and gorgeous flowering shrubs of the lower elevations to the hardwood trees and English flowers of the highest; from the steaming haunts of the bear and buffalo to the cool regions beloved of the elk and elephant. There are choice of climate and choice of scenery to suit any constitution and to gratify every taste; the wildest rugged country and the sweetest undulating grassy plains; wild sport for the daring, golf-links and trout-fishing for quieter spirits and a new world withal for those who need a complete change from familiar scenes.

*(Summary of the Article on Lankatheeswarar in Tamil appearing on Page 9 )*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை ஆற்றுப்படை

சு. நடேசபிள்ளை, பி. ஏ., பி. எல்.

இந்தியாவினின்று இலங்கைக்கு முதன் முறையாக வருபவர்களில் அநேகர், இராமாயணத்திற் கூறப்பட்ட இலங்கை இதுதானு என்று கேட்பதுண்டு இந்தியாவில் இராமாயணத்தைப்பற்றி அறியாதார் இல்லையென்றே சொல்லலாம். ஆதலின், அங்கிருந்து இலங்கைக்கு வருபவர்கள், பண்டிதராயினும் சரி, இலங்கையுடன் இராமாயணத்தையும் சேர்த்து நினைப்பது இயற்கையாகும்

இராமாயணம் முழுவதும் கட்டுக்கதை என்ற கொள்கையுடையோரும் இக்காலத்தில் உளர். அவர்கள் இராமாயணத்திற் கூறப்பட்ட இலங்கையை ஒரு கற்பனை நாடாகக் கருதுவர். இராமாயணத்தைப் பற்றி ஜெர்மன் பாஷையில் ஓர் ஆராய்ச்சி நூல் எழுதிய ஜக்கோபி (Jacobi) என்பவர், சீதை என்ற சொல் உழவுசால் எனப் பொருள்படுமாதலின், இராமாயணம் உழவுத் தொழிலை உருவகப் படுத்தற்கு எழுந்த காவியம் என்று கூறினர். வேறு சில ஆராய்ச்சியாளர்கள் வட இந்தியாவிலிருந்த ஆரியர் விந்திய மலைக்குத் தெற்கே பரவிய வரலாற்றை இராமாயணம் விளக்குகிறதென்று கொள்வர்.

இராமாயணத்திற் சொல்லப்பட்ட செய்திகளில் ஓரளவு உண்மை உண்டென்ற கொள்கையுடைய மேனுட்டறிஞர்களில் பார்ஜிட்டர் (Pargiter) ஒருவராவர். அவர் இந்தியாவிற் பல ஆண்டுகளாக உத்தியோகத்தில் அமர்ந்து, வடமொழி நூல்களிலுள்ள வரலாற்றுப் பகுதிகளைத் துருவி ஆராய்ந்தவர். இராமபிரான் சஞ்சரித்ததாக இராமாயணம் கூறும் இடங்களைப் பற்றி அவர் எழுதிய கட்டுரையில், தென்னிந்தியாவுக்கு அணித்தாயுள்ள இலங்கையே இராமாயணத்திற் கூறப்பட்ட இலங்கையாகும் என்று தமது அபிப்பிராயத்தை வெளிப்படுத்தினர். இதுவே பல நூற்றுண்டுகளாக இந்தியாவிலுள்ள மக்கள் மனதிற் பதிந்த கொள்கையாக இருப்பினும், சில ஆராய்ச்சியாளர்கள் இதைப்பற்றி ஐயம் நிகழ்த்தி வேறு கொள்கைகளை வெளியிட்டுள்ளார்கள்.

இவ்வாராய்ச்சியாளர்களில் ஒரு சாரார், இராமாயணத்திற் கூறப்பட்ட இலங்கை இந்தியாவுக்கப்பால் வெகு தூரத்திலுள்ள ஜாவா, சுமாத்திரா பிரதேசம் என்பர். வேறு சிலர், சர்தார் கீபே (Kibe) என்பவரைப் பின்பற்றி, இந்தியாவின் மத்தியப் பிரதேசத்தில் இலங்கை இருந்ததாகக் கருதுவர். இந்த இரண்டு கொள்கைகளும் பொருத்தமற்றனவாகத் தோன்றுகின்றன. சாவகத்தீவு என்று தமிழிலக்கியம் கூறும் ஜாவா முற்காலத்தில் யவத்வீபம் என்று வடமொழியில் வழங்கியது. வான்மீகி முனிவர் கிஷ்கிந்தா காண்டத்தில் யவத்வீபத்தை இலங்கையினின்று வேறுபட்ட பிரதேசமாகவே காட்டியுள்ளார். சுக்கிரீவன் கிழக்குத் திசையிலுள்ள நாடுகளைக் கூறும்போது யவத்வீபத்தையும், தெற்குத் திசையிலுள்ள நாடுகளைக் கூறும்போது இலங்கையையுங் குறிப்பிடுவதனின்று, இலங்கை யவத்வீபம் ஆகாதென்று வெள்ளிடைமலைபோல் விளங்கும். இனி, இலங்கை சமுத்ரமத்தியில் உள்ளதென்று வான்மீகி முனிவர் பன்முறையுங் கூறுகின்றார். சமுத்ரமில்லாத இடத்தில் இலங்கை இருந்ததாக சர்தார் கீபே எண்ணுவது வெறும் கற்பிதமாகும்.

இலங்கை என்று இப்பொழுது வழங்கப்படுகின்ற தீவே பல நூற்றுண்டுகளாக இப் பெயருடன் விளங்கிவருகின்றது. இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்குமுன் இயற்றப்பட்ட சிலப்பதிகாரத்தில் இந்நாடு இலங்கை என்ற வழங்கப்படுவது தமிழறிஞர் நன்கு தெரிந்ததாகும். அக்காலத்தில் இந் நாட்டை ஆண்ட மன்னனைக் 'கடல் சூழிலங்கைக் கயவாகு' என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. கி. மு. ஐந்தாம் நூற்றுண்டினின்று இந்நாட்டின் சரித்திரத்தைத் தொடர்ந்து கூறும் மஹா வம்சம் என்ற பழைய இதிகாசத்தில் இந்நாடு ஆதிமுதல் அந்தம் வரையில் இலங்கை எனறே வழங்கப்படுகிறது. கி. மு. ஐந்தாம் நூற்றுண்டில் வட இந்தியாவினின்று இலங்கைக்கு வந்த விஜயன் என்ற அரசகுமாரன் அக்காலத்தில் இலங்கையிலிருந்த யக்ஷர்களுக்கு அரசியான குவேணியை மணந்த சரித்திரத்தை மஹாவம்சம் கூறுமிடத்து, இலங்கையின் மலைப்பிரதேசத்தில் யக்ஷர்களின் தலைநகரமாகிய இலங்கர்புரி இருந்ததென்று குறிப்பிடுகின்றது. 'திரிகூடபர்வதம் என்கிற மலையின் உச்சியில் விளங்கிய இலங்காபுரியை இராவணன் தனது தலைநகரமாகக் கொண்டிருந்தான்' என்று இராமாயணம் கூறுவது ஈண்டு நினைவுகொள்ளத் தக்கது.

திரிகூடபர்வதத்தைப்பற்றி, கி. பி. பதின்மூன்றும் நூற்றுண்டில் வாழ்ந்த வீரபாண்டியன் குறிப்பிடும் ஒரு சாசனம் எமது ஆராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படுவதாக உள்ளது. இச் சாசனம் சில ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு முன் புதுக்கோட்டை சமஸ்தானத்திற் கிடைத்தது. பாண்டியப் பேரரசைத் தென்னிந்தியாவில் நாட்டிய ஜடா வர்மன் சுந்தர பாண்டியனது சகோதரனாகிய வீரபாண்டியன் இலங்கையை வென்றது சரித்திரப் பிரசித்தமான செய்தியாகும். இச்செய்தியை வீரபாண்டியன் தன் சாசனத்திற் கூறும்போது, தனது வெற்றிக்கு அடையாளமாகப் பாண்டிய அரசின் மீன் இலச்சினையை இலங்கையில் திருக்கோணமலையிலும், திரிகூட பர்வதத்திலும் பொறித்ததாக விவரிக்கின்றான். இலங்கைக்கு அப்பாலுள்ள புதுக்கோட்டையிற் கிடைத்த இச் சாசனத்தின் ஒரு பகுதி முற்றும் உண்மையான செய்தியாகும் என்பதற்கு இப்பொழுதும் இலங்கையிற் சான்று இருக்கின்றது. திருக்கோணமலையிலுள்ள கோட்டை வாசலில் இன்றும் இரட்டைமீன் இலச்சினை விளங்குவதைக் காணலாம். மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் போர்த்துக்கேயர் திருக்கோணமலையிலிருந்த சிவாலயத்தைத் தகர்த்தபோதிலும் பாண்டிய இலச்சினைக் கல்வெட்டு அவர்களது கொடிய செயலினின்று தப்பி, இன்றும் சிதைவுபடாமலிருப்பது பெரிய விந்தையே. வீரபாண்டியன் திருக்கோணமலையில் மீன் இலச்சினை பொறித்தது உண்மையாயின், அவன் சாசனத்திற் கூறியவாறு, திரிகூடபர்வதத்திலும் அவ்விலச்சினையைப் பொறித்திருக்கவேண்டும். அவன் கூறும் திரிகூடபர்வதம் இலங்கையில் எப்பாகத்தில் உள்ளது? இதை யாம் அறிந்தால், இராமாயணத்திற் கூறப்பட்ட இலங்கை இந் நாடுதான் என்று அறுதியிட்டுத் தீர்மானிக்கலாம்.

இந் நாட்டை இராமாயணத்துடன் சம்பந்தப்படுத்தும் பல ஐதிகங்கள் கர்ண பரம்பரையாக வழங்கிவருகின்றன. சீதாபிராட்டி சிறைவாசமிருந்த அசோகவனம் இந் நாட்டின் உயர்ந்த சிகரங்களில் ஒன்றாகிய ஹக்கலா என்ற இடத்தைச் சார்ந்ததென்று அங்குள்ள சாதாரண மக்கள் வாயினின்று இப்பொழுதுங் கேட்கலாம். இது சீதாதலாவா என்று கூறப்படும். இதற்கப்பால் சிறிது தூரத்திலுள்ள பாலுகமா என்ற இடம் அனுமானால் எரியுண்டதென்று சொல்லப்படுகின்றது. பாலுகமா என்பதன் பொருள் பாழடைந்த கிராமம் என்பதாகும். இந்த இடத்திற் புற்பூண்டும் முளைப்பதில்லை. ஹக்கலாவிலிருந்து ஹப்புத்தளை என்ற இடத்திற்குப் போகிற வழியில் வெளிமட என்னும் அழகிய கிராமத்தின் பக்கத்தில் இராமலங்கா என்ற ஓரிடம் இருக்கின்றது. இங்கேதான் இராவணன் இறுதியாகப் போர்செய்து வீழ்ந்தான் என்றும், அதுமுதல் இவ்விடம் இராமலங்கா எனப் பெயர்பெற்றது என்றும் இங்குள்ள புத்த பிக்ஷுக்கள் ஒரு கர்ண பரம்பரையான ஐதிகத்தைக் கூறுகின்றார்கள். இதற்கருகில், தூரும்வெலா பன்சாலா என்ற இடத்திற் சீதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராட்டி தன் கற்புநிலையினின்று தவறவில்லை என்று இராமபிரான் முன்னிலையிற் சத்தியஞ் செய்ததாக ஓர் ஐதிகம் வழங்கி வந்ததென்று மேஜர் போர்ப்ஸ் (Major Forbes) 1840ஆம் ஆண்டில் வெளியிட்ட 'இலங்கையிற் பதினோராண்டுகள்' (Eleven Years in Ceylon) என்ற தமது புத்தகத்திற் கூறியுள்ளார். இவ் வாங்கிலேயப் படைவீரர் நூறு ஆண்டுகளுக்கு முன் அடர்ந்த காடுகள் செறிந்திருந்த இம்மலைப் பிரதேசத்திற் குதிரைமேற் சென்று பல இடங்களைப் பார்த்து ஆங்காங்கு இருந்த சிங்களமக்கள் வாயிலாக இராமாயண சம்பந்தமான பல ஐதிகங்களைக் கேட்டு, அவற்றைக் குறிப்பிட்டிருக்கின்றார். இம் மலைப்பிரதேசத்தில் இராவண எல்லா என்று ஒரு குன்று இருக்கின்றது. இதில் நீளமான ஒரு குகை உண்டு. இராவணன் தன் தலைநகரிலிருந்து அந்தரங்கமாக வெளிச்செல்வதற்கு இக் குகையை உபயோகித்து வந்தான் என்று சொல்லப்படுகின்றது.

மேற்கூறிய ஹக்கலா என்னும் இடத்தினின்று ஹப்புத்தளை என்னும் இடம் வரையிலுள்ள மலைப்பிரதேசம் எவருக்கும் வியப்பை உண்டாக்கக்கூடிய காட்சியைத் தருகின்றது. ஹக்கலாவினின்று பாலுசமாவுக்குச் சென்று, இம் மலைப் பிரதேசத்தின் உன்னதக் காட்சியை அங்கிருந்து பார்ப்பவர்களுக்கு, ஒருவித மருட்கை உணர்ச்சி உண்டாகிறது. மூன்று பக்கங்களையுடைய அகன்ற பிரதேசமாக இது காணப்படுகின்றது. மூன்று பக்கங்களிலும் செங்குத்தாக ஏறக்குறைய ஐயாயிரம் அடி உயரமுள்ள மலைத்தொடர்கள் பயங்கரத் தோற்றத்துடன் எழுகின்றன. இவற்றிற்கிடையில் முப்பது மைல் அளவு அகன்று ஒருபதிந்த வள்ளம்போல் ஏறக்குறையச் சமபூமியாக இப் பிரதேசம் விரிந்து கிடக்கின்றது. இதன் மத்தியில்தான் இராவணன் போர் செய்து வீழ்ந்த இடமெனப்படும் இராமலங்கா இருக்கின்றது; இதன் எல்லைப்புறத்தில்தான் எரியுண்டதாகச் சொல்லப்படும் பாலுசமா இருக்கின்றது. இராமாயணத்தில் இலங்கையைப் பற்றிய வர்ணனைகளைப் படித்தவர்களுக்கு இதுதான் திரிகூடபர்வதமென்று ஐயமின்றி உடனே தோன்றும்.

திரிகூட பர்வதத்தின் உச்சியில் இராவணனது தலைநகரமாகிய இலங்காபுரி விளங்கிற்றென்றும், இந் நகரம் நிலவில் ஆகாயத்தில் மிதப்பதுபோல் அநுமானுக்குத் தோன்றிற்றென்றும் இராமாயணம் கூறும். திரிகூடபர்வதத்தின் மூன்று பக்கங்களே இந் நகருக்கு இயற்கை மதில்களாக அமைந்திருந்தன. இக் காரணத்தால் இலங்காபுரியைப் பகைவர்கள் எவரும் அணுகமுடியாதென்று இராவணன் இறுமாந்திருந்தது வியப்பன்று. இப் பிரதேசத்தில் இப்பொழுதுள்ள பண்டாரவெலா, தியத்தலாவா என்ற நகரங்களும் இரவில் ஆகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யத்தில் மிதப்பன போன்ற அழகிய காட்சியைத் தருகின்றன. இப் பிரதேசத்தின் தெற்கெல்லையாகிய ஹப்புத்தளையினின்று பகற்பொழுதில் தென் சமுத்திரத்தையும், அதன் பக்கத்தில் அம்பாந்தோட்டையிலுள்ள உப்பளத்தையும் பார்க்கலாம். இராமருடைய சேனை தென் சமுத்திரத்தின் கரையோரமாக வருவதை இராவணன் தன் தலைநகரிலிருந்து பார்த்தான் என்று இராமாயணம் கூறுவது இப் பிரதேசத்தின் அமைப்புக்கு பொருத்தமாகவே உள்ளது. இராமருடைய சேனை தென் சமுத்திரக் கரையிலுள்ள டொண்ட்ரா (தேவேந்திர நுவரா) என்ற இடத்திலிருந்து மலைப்பிரதேசத்திலுள்ள அலுத்நுவரா என்னும் இடத்துக்குத் தேவர்கள் விழாவைப்போல, சூரிய சந்திரக் கொடிகளுடன் அணிவகுத்துச் சென்றதென்று ஹெத்தாரகோறளையைப் பற்றிய ஒரு பழைய சாசனங் கூறுகின்றது. இதனின்று இராமர் சேனை இலங்காபுரிக்குச் சென்ற வழியைப்பற்றி இங்கு ஓர் ஐதிகம் இருப்பது புலப்படும். மலைத் தொடர்களை மதில்களாகக் கொண்ட இலங்காபுரியை இவ் வழியினாலேதான் அணுகக்கூடுமென்பதை இராவணனது சகோதரனாகிய விபீஷணனிடமிருந்து உளவறிந்து இராமர் சேனை இவ் வழியாகச் சென்றதென்று யூகிக்கக் கிடக்கின்றது.

அநுமான் இலங்காபுரியை அடைந்து சீதையைக் கண்டு பின் இராமரிடந் திரும்புங் காலத்தில், அரிஷ்ட பர்வதத்திற் சிறிதுநேரம் தங்கியதாக வான்மீகி முனிவர் கூறுகின்றார். இப் பர்வதத்தைப் பற்றிய சான்று இந்நாட்டில் உள்ளது, அசோகன் மகனாகிய மஹிந்தன் தேவநம்பிய திஸ்ஸா என்ற இந்நாட்டு மன்னனைப் புத்த சமயத்துக்குத் திருப்பியபின், பௌத்த வழிபாட்டிற்குரிய இடங்களாகிய விஹாரங்கள் அனுராதபுரத்திலும் அதன் பக்கத்திலும் கட்டப்பட்டன. அவ் விகாரங்களுள் ஒன்று அரிட்ட விஹாரம் என்று மகாவம்சம் கூறும். இவ் விகாரம் இதற்கருகிலுள்ள ரிட்டிகலா என்ற மலையின் பெயரைத் தழுவியதாகும். கலா என்ற சிங்களச் சொல் மலையைக் குறிக்கும். அரிஷ்டம் என்ற சொல் அரிட்டம் என்று மருவி, பின் முதல் அகரம் காலகதியில் நழுவி, ரிட்டி என வந்ததென்று கூறப்படுகின்றது. இம்மலை இராமாயணத்துடன் சம்பந்தப்பட்டது என்பதை இங்குள்ளவர் அறியாராயினும், இராமாயணம் கூறும் இலங்கை இந்நாடுதான் என்று நிச்சயித்தற்கு இம் மலையின் பெயர் ஓர் அரிய சான்றாக இருக்கின்றது.

இராவணன் வாழ்ந்த இடம் பாண்டிய நாட்டிற்கு எதிரில் இருந்ததாகச் சுக்கிரீவன் தன் சேனை வீரர்களுக்குக் குறிப்பிட்டதை வான்மீகி ராமாயணத்தில் கிஷ்கிந்தா காண்டத்தில் 41ஆம் சர்க்கத்திற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணலாம். அப்பகுதியின் மொழிபெயர்ப்பை இங்குத் தருகின்றோம்: ''அகஸ்திய முனிவரின் அநுக்கிரகம் பெற்று .....மஹாநதியாகிய தாம்ரபர்ணியைக் கடப்பீர்களாக. ...... அங்கிருந்து நடப்பீர்களாயின், பாண்டிய நகர துவாரத்தில் சுவர்ண மயமாகி முத்துக்களால் அலங்காரஞ் செய்யப்பெற்று நன்கு நிர்மிக்கப்பட்ட பொற்கவாடத்தைக் காண்பீர்கள். அங்கிருந்து சமுத்ரதீரஞ் சென்று சீதையைத் தேடும் பொருட்டு சமுத்ரத்தைத் தாண்டும் விஷயத்தை ஆலோசித்து நிச்சயித்துக்கொள்வீர்களாக. அந்த சமுத்ரத்தினிடையில் அகஸ்தியரால் வைக்கப்பட்ட மகேந்திரம் என்னும் பர்வதம் இருக்கின்றது. ......அந்தச் சமுத்திர மத்தியில் இக்கரையில் நூறு யோசனை விஸ்தீர்ணமுடையதும் மனிதர்களுக்குப் போகமுடியாமல் மிக்க விளக்கமுற்றதுமாகிய ஒரு தீவு இருக்கின்றது. அந்தத் தீவு முழுமையுஞ் சீதாதேவியைத் தேடுங்கள். அந்தப் பிரதேசமே துர்ப்புத்தியும் தேவேந்திரனை நிகர்த்த தேஜஸுடையவனும் இராக்ஷதர்களுக்குப் பிரபுவும் நம்மால் வதைக்கத் தகுந்தவனுமாகிய இராவணனுக்கு வாசஸ்தானம்.'' இங்குப் பாண்டியருக்குப் பழைய தலைநகரமாய் இருந்த கபாடபுரமும் அதனோடு தொடர்புற்ற மகேந்திர மலையும் குறிப்பிடப்பட்டுள்ளன. வான்மீகிமுனிவர் இந்தச் சர்க்கத்திற் கூறியதையே தழுவிக் கம்பநாடரும்,

> தென்றமிழ்நாட் டகன்பொதியிற் றிருமுனிவன்
> தமிழ்ச்சங்கஞ் சேர்கிற்பிரேல்
> என்றுமவ னுறைவிடமா மாதலினா
> னம்மலையை யிறைஞ்சியேகிப்
> பொன்றிணிந்த புனல்பெருகும் பொருநையெனுந்
> திருநதியின் பொழியநாகக்
> கன்றுவளர் தடஞ்சாரல் மகேந்திரமா
> நெடுவரையுங் கடலுங்காண்டிர்

என்று செய்யுளியற்றியுள்ளார். கம்பர் காலத்துக்கு ஏறக்குறைய நூறுண்டுகளுக்குமுன் வடமொழியில் இயற்றப்பட்ட சம்புராமாயணம் இலங்கையை 'சிம்ஹளத்வீபம்' என்றே வெளிப்படையாகக் கூறுகின்றது.

தமிழ்நாட்டில் மிகப் பழைய காலந் தொட்டு இராமர் சேனை பாண்டிநாட்டைச் சார்ந்த சேதுவழியாகத்தான் சென்றது என்ற கொள்கை இருந்து வருவதற்கு ஒரு சான்று சங்க இலக்கியமாகிய அகநானூற்றில் 70ஆம் செய்யுளிற் காணப்படுகின்றது. அது வருமாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்வேற் கவுரியர் தொன்முது கோடி
முழங்கிரும் பௌவம் இரங்கும் முன்றுறை
வெல்போர் இராமன் அருமறை கவித்த
பல்வீழ் ஆலம் போல
ஒலியவிந் தன்றிவ் வழுங்கல் ஊரே.

இராமர் பாண்டிநாட்டைச் சார்ந்த தனுஷ்கோடியில் ஓர் ஆல மரத்தின் கீழிருந்து இரகசிய ஆலோசனை நடத்திய செய்தி இங்குக் கூறப்படுகின்றது, இச் செய்யுள் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முற்பட்டதாகும்.

தனுஷ்கோடிக்கு அருகிலுள்ள இராமேசுவரத்தில் இராமர், சிவ பெருமானை வழிபட்டார் என்ற ஐதிகம் பன்னெடுங் காலமாகப் பரதகண்டம் முற்றிலும் வழங்கிவருகின்றது. கி. பி. ஏழாம் நூற்றாண் டில் வாழ்ந்த திருஞான சம்பந்த சுவாமிகள் இந்த ஐதிகத்தை இராமேசுரப் பதிகத்திற் குறிப்பிட்டுள்ளார்கள்.

'சேது' என்ற பெயர் பிரசித்தமானது. இச்சொல் அணையைக் குறிக்கும். தனுஷ்கோடியினின்று இராமரின் சேனை கடலைக் கடந்து இலங்கை செல்வதற்கு அணை கட்டியதாகச் சொல்லப்படுவதால், தனுஷ்சோடிக்கு இப் பெயர் மிகப் பழைய காலந்தொட்டு வழங்கி வருகின்றது. இவ் வணைக்குச் சான்றாக இப்பொழுதும் இவ்விடத்தி னின்று இலங்கையைச் சேர்ந்த மன்னார்த் தீவுவரையில். மணல் திட் டுகளால் ஆகிய ஒரு தொடர் முப்பது மைல் தூரம் கடலிற் காணப் படுகின்றது. இதை ஆங்கிலத்தில் ஆதாம் அணை (Adam's Bridge) என்று கூறுவர். இவ் வணையைப்பற்றி 'என்சைக்ளோபீடியா பிரிட் டானிக்கா' (Encyclopaedia Britannica) என்ற பல்பொருட் பேரக ராதியிற் சில விபரங்களை அறியலாம். சில திட்டுகள் கடல் மட் டத்துக்கு மேலும், சில திட்டுகள் மூன்று அல்லது நாலடி ஆழத்துக் குக் கடலுள் அமிழ்ந்தும் இருக்கின்றன. ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் இத் திட்டுகள் இடையீடின்றி ஒரே தொடராக இருந்தன என்றும், பின்னர் ஒரு கடுமையான புயல் வீசியபோது இவற்றில் இடையிடையே பிளவு ஏற்பட்டதென்றும் தெரியவருகின்றது. இயற்கையிலேயே அணைபோல் இருந்த இம்மணல் திட்டுத் தொடரை ஒரு சேனை கடக்கத்தக்கதாக இராமரின் படை வீரர்கள் செய்தனரென்று கொள்ளுதல் தகும். இவ் வணை நூறு யோசனை தூரமிருந்தது என்று வான்மீகி முனிவர் கூறுவதைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்கிட்டு இது நானூறு மைலுக்கு மேற்பட்டதாகையால், இப்பொழுது இலங்கையென்று வழங்கப்படும் நாட்டிற்கு இக் கணக்குப் பொருந்தாது என்று வாதிப்பார் உளர். வான்மீகி வேறு பல சந்தர்ப்பங்களிலும் காவியரீதியில் நூறு யோசனை என்ற பிரயோகத்தை அதிசயோத்தி அலங்காரமாய்ப் பன்முறை உபயோகிக்கின்றபடியால், இங்கு நூறு யோசனையென்பது அதிக நீளத்தைக் குறிக்குமென்றே கொள்ளவேண்டும்.

மேற்கூறிய மணல் திட்டுகள் ஆரம்பிக்கும் இடமாகிய சேதுக் கரையைத்தான் வான்மீகி முனிவர் மஹேந்திரதுவாரம் எனக் கூறினரென்று யூகிக்க இடமுண்டு. மஹேந்திரமலை சேது நாட்டினின்று திருச்செந்தூர் கன்னியாகுமரி என்னும் இடங்கள் வரையில் பூமியில் அழுந்தியதாகச் செல்லும் கந்தமாதனம் என்கின்ற மலைத்தொடரைக் குறிக்கும் எனக் கொள்வதற்கு ஆதாரமிருக்கிறது. கன்னியாகுமரியின் பக்கத்தில் மகேந்திரம் என்ற பெயருடன் ஒரு மலை இப்பொழுதும் உளது. சேது நாட்டிலுள்ள திருவுத்தரகோசமங்கையில் ஆகமம் வெளிப்படுத்தப்பட்டது என்ற திருவிளையாடல் ஐதிகத்தை மாணிக்கவாசக சுவாமிகள்,

> மன்னு மாமலை மகேந்திர மதனில்
> சொன்ன ஆகமந் தோற்றுவித் தருளியும்

என்று குறிப்பிடுவதால், மகேந்திரம் சேது நாட்டில் உள்ளது என்பது தெளிவாகின்றது.

இதுகாறுங் காட்டிய ஏதுக்களால், இப்பொழுது இலங்கை என்று வழங்கும் இந்நாடே இராமாயணத்திற் கூறப்பட்ட இலங்கை எனத் தீர்மானிக்கலாம். கிரேக்க பாஷையில் கிறீஸ்து சகாப்தத்திற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன், ஹோமர் (Homer) என்ற மகாகவி இயற்றிய இலியடு (Iliad) என்னும் காவியத்திற் கூறப்பட்ட டிராய் (Troy) என்ற நகரம் அக் கவிஞரின் கற்பனையே அன்றி உண்மையில் இருந்ததில்லை எனப் பல மேதாவிகள் கருதியதுண்டு. ஆனால், சில ஆண்டுகளுக்குமுன், புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் (Archaeologists) டிராய் இருந்த இடத்தைக் கண்டுபிடித்து அந்நகரத்தின் அமைப்பை நிரூபித்தனர். அதுபோல, இலங்காபுரி என்று இராமாயணத்திற் கூறப்பட்ட தலைநகரம் இந்நாட்டிற் பூர்வீக காலத்தில் இருந்ததென்று வருங்காலத்தில் நிரூபிக்கப்படும் என்று நம்புகின்றோம்.

(உரைநடை என்னும் நூலிலிருந்து தொகுக்கப்பட்டது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்நூல் பற்றிய குறிப்பு

நூரளை ஸ்ரீ இலங்காதீஸ்வரர் கோயில் வரலாறு மாத்திரமே எழுதி அச்சேற்றுதற்கு நினைத்த எமக்கு மஞ்சுதோய் மலைப்பிர தேசத்தில் அரசாட்சி செய்த மாபெரும் சிவபக்தனான இராவணேஸ் வரனின் செய்திகளும் இந்நூலில் இடம் பெறுதற்கு திருவருள் தூண்டிற்று.

"ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டொன்றாகும்
அன்றி யதுவரினும் வந்தெய்தும் - இன்றி
நினையாது முன்வந்து நிற்கு மிவையெல்லாம்
எனையாளும் ஈசன்செயல்.

என்பது ஆன்றோர் திருவாக்கு. அருளாட்சி செய்யும் சுயம்பு லிங்க இலங்காதீஸ்வரரைச் சிக்கெனப் பற்றியமையாற் போலும், முன்னர் இங்கு ஆட்சிசெய்த இராவணேஸ்வரனைப் பற்றிய எண்ணங்களும் ஊற ஊற சேர்க்கைகளும் இந்நூலில் இடம்பெறலாயின. இங்கு மங்குமாக மறைந்து, காலத்தால் மறக்கக் கூடியனவாய இந்து சமய திணைக்களப் பணிப்பாளர் தந்த "இலங்கை ஆற்றுப்படை" எனும் சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரையும், இராமபிரான் அயோத்தியில் இருந்து இலங்கை வரை சென்ற வழிகளைக் காட்டும் படமும் ஒருமுகப் படுத்தப்பட்டு "பழமை தேடிச் செழுமை நாடு" என, பல்லோரினது சிந்தனையைக் கிளறி உணர்ச்சியினைத் தூண்டி ஏதோ ஒரு விதத்தில் பயன்படக்கூடியவாறு இந்நூல் வளம் பெறுகிறது. இலங்காதீஸ்வரப் பெருமானின் திருவருளால் அறங்காவல் அமைச்சரின் ஆசிச்செய்தியும் முக்கியமாக அவரின் விசேட அனுமதியும் இந்நூலை இந்து சமயத்திணைக் கள பிரதேச அபிவிருத்தி அமைச்சின் ஆதரவில் அச்சேற்றுகிறது. சிவராத்திரிச் சிறப்பு மலருக்கு இலங்காதீஸ்வர ஆலயத்தைப் பற்றி எழுதிய கட்டுரையை தனி வெளியீடாக அச்சிடத் திருவுளங்கொண்ட இந்து சமயத் திணைக்களப் பணிப்பாளரின் பேரூக்கமும் பேராதர வும் எமக்கும் தொடர்பூக்கத்தைக் கொடுத்து இந்நூல் அச்சேறுதற்கு வழிகோலியது. இலங்காதீஸ்வரரின் அருள்வழி அச்சேறும் இந்நூல் உருவிற் சிறிது எனினும் ஸ்ரீ நகரில் இராவணேஸ்வரனைப் பற்றிய ஓர் எதிர்கால ஆராய்ச்சி நிலையத்துக்கு வித்தாக இது அமையத் திருவருளை வேண்டுகிறோம்.

— ஆசிரியர் .....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## RAVANA'S
## LEARNING AND PIETY.

We have already referred to the Rakshas as well-versed in the Vedas and their Angas and in Vedic ritual, and also to their matins or morning prayers. There are numerous passages in the Tamil classics pointing to Ravana, who was not only skilled in arms as became the lord of Lanka but richly endowed with holy love. 'Maraikal ore ayiram yan vallane' *i.e.* 'I am a past master in a thousand marais.' So said he to Mayan, his would-be father-in-law, when the latter, pleased with his form and beauty, asked him who he was, and to what family he belonged, with a view to choose him as his daughter's husband. He knew by heart Rik and Samam and sang them, when occasions needed, in a touching, pathetic or melting manner. Vide St. Appar has in his Tirumarais verses alluding to this fact. I, 34 'Irukkisaikal pada', I, 43. 'Kannalin' githam pada', I, 49. 'Veda Githangal pada', I. 70 'patthu voi gitam pada', I 78 'thuttanai thuttu-thirthu-chuvai-pada-Githam ketta', II. 31 'Githa-kinnaram pada', Similarly has St.,Jnana Sambandhar referred to him as 'versed in Vedas and in learning'. In his Tirumurais these verses exemplify it. II-92. 'Sama vedamore Githa mothia Dasamukan'. Ravana was a worshipper of Siva who taught him the Five Letters. III-119, 'Anjeluttth-uraikka Arulinan'. Though a Titan of Titans, he never relied on himself as the Lord of Hosts, but on the efficacy of the boons offered to him. His piety is patent in St. 110 of Ravanan-vathaipadalam. It is said that, before he aimed his dart or used his missile he worshipped Isa in his usual manner and performed puja "Pusanai-tholil-purinthu-than-Muraimayir-Potrum-Isanai-tholuthu." By his austerities and penances for years he obtained boons from Siva, as longevity, and a broad bright sword, which gave him victory. II-54 'mukkodi vanal', 141 'valodu nal avarkku arul seitha'. An instance of the severity of his penance may be cited here. When Ravana promised his mother to equal his brother Kuvera in


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

splendour, he went to the hermitage of Gokarna or 'the Cow-Ear' in the Kerala country in company with his brothers and performed austerity, After a long penance he plucked his heads one after another, so goes the legend, and threw them into the fire. When he was about to do it the tenth time, Brahma appeared and offered him three great boons, *viz.*, indestructibility by all creatures above or more powerful than man, recovery of his lost heads, and power to assume any shape he pleased, like Milton's spirits or fallen angels. He was so learned that he seldom acted without consulting wisdom. II, 3. Vitthakap-padai-valla arakkan.' He knew the arts of peace and war. He was proficient in music, vocal and instrumental. The six-stringed *yal* was his forte. With it made of his own nerves he pleased God Siva and won His Mercy and Grace. "Tham - aratthal pora-thakai kol val padai, Kamarathal Sivan Karatthu Vanginan," St. 160 of the same Ravana-vathai-padalam. It means that the grant of the sword (weapon), wich was so sharp and keen that it could not bear filing, was made by Siva with his own hands on hearing his sweet strains or Kamara. He was so expert a musician that he had a *yal* or Veenai inscribed on his flag, and hence poets have described him as 'Veenai Kodiyone.' or the possessor of the flag with the figure of the yal inscribed on it. "Eluthu-veenai-kol-enthu-pathaki-mel, *i.e*, over the lofty banner which bore the painted symbol of the lute (Stanza 21) and "Kodiyinmelurai veenai" *i.e.*, the lute inscribed on the high flag or standard (St. 34) *I bid*. The only person who is alleged to have excelled him in music (and magic) was the Sage Agastya. A musicial treatise by Ravana, entitled 'Ravaneeyam', or the great Charmer is celebrated even to-day, and another, called 'Ravana-bet,' or 'Ravana-patthiam' was compiled in later times, probably in commemoration of his unique attainments in that soul-subduing as well as soul-stirring art.

(Extract from Ravana the great king of Lanka by M. R. PURNALINGAMPILLAI; B. A,, L. T.)

Chapter IV.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்வாங்கு வாழுவதற்கு வழி வகுக்கும் ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கப் பாடசாலைகளில், முக்கியமாக முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தர் அவர்களால் மட்டக்களப்பில் ஸ்தாபிக்கப்பட்ட சிவாநந்த வித்தியாலயத்திலும் இதனோடிணைந்த மாணவர் இல்லத்திலும் கல்வியும் ஒழுக்கப் பயிற்சியும் பெற்ற திரு. வே. சதாசிவம் அவர்கள் சுவாமி விபுலாநந்தரின் ஆசி பெற்று வாழ்வில் உயர்ந்த ஓர் இலட்சிய உத்தமர். உற்றுளி உதவியும் உறு பொருள் கொடுத்தும் பிற்றை நிலை முனியாது அருளுயர் அடிகளிடம் ஆங்கிலமும் தமிழும் கற்று அவர் வழிநின்ற நல்மாணவனாக உள்ளத்தால் உயர்ந்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் இலங்கைப் பல்கலைக் கழகத்திலும் பட்டங்கள் பெற்று செந்தண்மைபூண்டொழுகும் நல்லாசிரியனாக இலங்கைக் கல்வி அமைச்சின் பரீட்சைப் பகுதியிலும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திலும் உதவிஆணையாளராக கல்விச் சேவையில் நீதிநெறியில் நின்று களங்கமற்ற சேவைசெய்து இளைப்பாறியவர்கள். இளைப்பாறிய கட்டற்ற வாழ்வில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் காட்டிய ஆத்மீக வழிநின்று கற்றதை கசடறக் கற்று கற்றதுணர விரித்துரைத்து அதற்குத் தக நிற்பவர். ஆத்மீகத் துறையில் அனுபவம் பெற்ற பல இராமகிருஷ்ண சங்கத் துறவிகளினதும், இதர துறவிகளினதும் சந்திப்பில் ஈடுபாடுடையவர். ஆத்மீக அருள் திரு R. K. முருகேசு அவர்களுடன் அணுக்கமாகப் பழகும் வாய்ப்பினைப் பெற்று தவமுனிவர் ஸ்ரீ சிவபாலயோகி மகராஜ் பிரதிஷ்டை செய்து வைத்த ஸ்ரீ இலங்காதீஸ்வரரில் காதலாகியதன் பிரதிபலிப்பே இந்த அழகும், செம்மையும், உண்மையும் வாய்ந்த இச் சிறு நூலாகும். இந்நூல் வாழையடி வாழையாக வரும் எதிர்கால மக்கட் கூட்டத்தினருக்கு கோயிலின் மெய்ப்பொருள் கூறும் ஒரு கலங்கரை விளக்கமாக என்றும் நின்று நிலவும் தன்மையது. ஈழத்து சிவத்தலங்களையும் நுவரெலியாவையும் ஆராய்ந்து கூறும் அறிஞருடைய ஆங்கிலத் துணுக்குகளும், நுவரெலியாவை மையமாகக் கொண்ட மலைநாட்டு ஐதீகங்களை ஆராய்ச்சிக் கண் கொண்டு எழுதிய "இலங்கையாற்றுப் படை" என்ற தமிழறிஞர் சு. நடேசபிள்ளை அவர்களின் கட்டுரையும், இந்நூலை வளம்படுத்துவன. நுவரெலியாவில் மலிந்துள்ள வேறு பல ஐதீகங்களையும் அறங்காவல் அமைச்சர் குறிக்கும் "இராவணன் வாழ்ந்த அடிச்சுவடுகளைப் பிரதிபலிக்கும் இடங்களின் பெயர்களையும்" தொடர்ந்து ஆராய்ந்து இராம, இராவண கதை இலங்கையில் நடந்த உண்மைக் கதை என அறுதியிட்டு உறுதி கூறும் ஆராய்ச்சிகளைத் தூண்டி ஓர் இராவணேஸ்வர ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் முன்னோடி நூலாக இந்நூல் அமைய ஸ்ரீ இலங்காதீஸ்வரப் பெருமானின் அருள் வேண்டி அவன் தாள் வணங்குகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வெளியீடு:

இந்து சமயத் திணைக்களம்,
பிரதேச அபிவிருத்தி அமைச்சு,
த. பெ. எண். 1700
244, காலி வீதி,
கொழும்பு-4.
இலங்கை.

ප්‍රකාශනය :

හින්දු කටයුතු දෙපාර්තමේන්තුව
ප්‍රදේශීය සංවර්ධන අමාත්‍යාංශය
තැ. පෙ. අංක 1700
244 ගාලු පාර
කොළඹ 4 - ශ්‍රී ලංකා

**Publication**

**Department of Hindu Affairs**
**Ministry of Regional Department**
**P. O. Box 1700**
**No. 244, Galle Road,**
**Colombo - Sri Lanka.**

குமரன் அச்சகம், கொழும்பு-12.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org